# சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි

20.07.2020 திங்கட்கிழமை


## எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகள் ஆரம்பம்

### இரண்டாம் தவணை விடுமுறை ஒக். 9இல்

கொழும்பு, ஜூலை 20
அனைத்து அரச பாடசாலைகளும் இரண்டாம் தவணைக்காக ஒக்ரோபர் 9ஆம் திகதி மூடப்பட்டு நவம்பர் 16ஆம் திகதி மீள ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அத்துடன் தரம் 11, 12 மற்றும் 13 தரங்களில் பயிலும் மாணவர்களுக்கான கல்வி

2

## ■ கொழும்பில் கொட்டித் தீர்க்கிறது மழை
## ■ அதிவேக நெடுஞ்சாலையில் மண் சரிவு

(விரிவு : பக்.7 )



## புதினம்? தெரியுமோ

நெடுக உள்ளூர் அரசியலைப் பற்றிக் கதைச்சுக் கொண்டிருக்காமல் இண்டைக்கு தென்னிலங்கை அரசியலுக்க போவம். இப்ப ஆரின்ர ஆட்சி நடக்குதெண்டு எல்லாருக்கும் தெரியும். தம்பி ஜனாதிபதி, அண்ணன் பிரதமர். 2015 க்கு முதல் இதே அண்ணன் ஜனாதிபதி, இதே தம்பி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்,

2

## புலமைப் பரிசில் – ஒக். 11
## உயர்தரப் பரீட்சை – ஒக். 12

கொழும்பு, ஜூலை 20
2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை (ஏ.எல்.) ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒக்ரோபர் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. க.பொ.த. உயர்தரப் பரீட்சை செப்ரெம்பர் 7ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 2ஆம் திகதிவரை யும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை செப்ரெம்பர் 13ஆம் திகதியும்

2

# 13+ என்ற பேச்சுக்கே இடமில்லை



### தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில் சஜித் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 20
அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று ஒருபோதும் அதிகாரங்களைப் பகிரமாட்டோம். தற்போது நடைமுறையில் உள்ள அதிகாரப்பகிர்வு நடைமுறை அவ்வாறே தொடரவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச திட்டவட்டமாக அறிவித்தார்.

2

## மரக்கிளை முறிந்து சிறுமி பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 20
நெடுங்கேணியில் மரக்கிளை முறிந்து தலையில் வீழ்ந்ததால் படுகாயமடைந்த சிறுமி உயிரிழந் துள்ளார் என்று

2

## வயதுக்கு வராத சைக்கிள் கட்சி

### கிண்டலடிக்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 20
கூட்டமைப்பு உள்ளடங்கலாக அரசுக்கு முண்டு கொடுக்கும் கட்சிகளையும் நீக்கினால் இரண்டே இரண்டு கட்சிகள் தான் வாக்குச் சீட்டில் மிஞ்சும். அவற்றில் ஒன்று எங்களுடையது. மற்றையது வயது வராத, முதிர்ச்சி பெறாத, வாதம் ஒன்றே வாழ்க்கை

2

## கொரோனா வந்ததும் கொழும்புக்கு ஓடியவர்கள் ராணுவமா, அரசியல்வாதிகளா?

### யாழ். மாவட்ட இராணுவ தளபதிக்கு வந்த சந்தேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 20
இராணுவம் அரசியல் செய்வதாக, அரசியல்வாதிகள் மக்களிடம் பொய் சொல்லுகிறார்கள். கொரோனா வந்தபோது கொழும்புக்கு ஓடியவர்கள் யார்? இராணுவமா? வெள்ளப்பெருக்கு வந்தால் உதவுவது இராணுவம். வீடுகள் அமைத்துக் கொடுப்பது இராணுவம். இது அரசியல் இல்லை. சிலர் இருப்பது கொழும்பில்.

2




## அரசியல் அந்தஸ்துக்காகவே தேர்தலில் நாங்கள் போட்டி

### ஒப்புக் கொள்கின்றார் விக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 20
எம்மைப் பொறுத்தவரையில் அமைச்சுப் பதவியோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியோ முக்கியமில்லை. மாறாக எமது கருத்துக்களையும், முன்மொழிவுகளையும் உலக அரங்கில் எடுத்துக் கூறவும் பரிகாரங்களைப் பெறவும்

2

## சிறிலங்கா சுதந்திரக்கட்சியைக் கேவலப்படுத்துவது பெற்ற தாயைக் கேவலப்படுத்துவதற்கு ஒப்பானது

### மஹிந்த அணிக்கு குட்டு வைக்கிறார் மைத்திரிபால

கொழும்பு, ஜூலை 20
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடாக முகவரி தேடிக்கொண்டு அதன் பின்னர் சிறிலங்கா பொது ஜன பெரமுனவுடன் சேர்ந்தவர்களே தாய்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், அதன் சார்பில் இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடும் என்னை உட்பட பலரை விமர்சிக்கின்றார்கள். அவர்களின் இந்தச் செயல் பெற்ற தாயைக் கேவலப்படுத்துவதற்கு ஒப்பானதாகும். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரி

3

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

## புலமைப் பரிசில்...

நடைபெறும் என்று கல்வி அமைச்சு முன்னர் அறிவித்திருந்தது. இந்த நிலையில் மாணவர்களினது கோரிக்கைக்கு அமைய பரீட்சைகள் ஒரு மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலர் என்எச்எம். சித்திரானந்தா தெரிவித்தார். க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஒக்ரோபர் 12ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 6ஆம் திகதிவரையும் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் 11ஆம் திகதியும் நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ,5)

## மரக்கிளை...

பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் வவுனியா நெடுங்கேணியில் இன்று இடம்பெற்றுள்ளது. நாட்டில் சீரற்ற காலநிலை நிலவுகின்றது. நெடுங்கேணியில் இன்று கடும் காற்று வீசியுள்ளது. அதன்போதே மரக்கிளை முறிந்து வீழ்ந்துள்ளது. அந்த மரத்தின் கீழ் நின்றிருந்த சிறுமியே தலையில் படுகாயமடைந்து உயிரிழந்தார் என்று ஆரம்ப விசாரணையில் பொலிஸார் தெரிவித்தனர். (து)

## புதினம் தெரியுமோ?

இன்னொரு தம்பி பொருளாதார அமைச்சர், மற்றொரு அண்ணன் சபாநாயகர். இப்பிடி குடும்ப ஆட்சி செய்து கொண்டிருந்த குடும்பம் , நல்லாட்சிக் காலத்தில அதிகாரமில்லாம இருந்து இப்ப திரும்ப அதிகாரத்துக்கு வந்திருக்கினம். ஆனா, முந்தி இருந்த ஒற்றுமை இப்ப குடும்பத்துக்க இல்லை. பிரதமர் அண்ணனுக்கும், ஜனாதிபதியான தம்பிக்கும் இடையில கடுமையான மனக்கசப்பாம். அதாலதான் அண்ணையின்ர அமைச்சுக்கு கீழ வாற மத்திய வங்கி அதிகாரிகளை தம்பி கூப்பிட்டு வைச்சு கும்மியெடுத்தவராம். இப்ப அதைப்பற்றி சொல்ல வரேலை. நடக்கப்போற எலக்சனில மூண்டில் ரண்டு பெரும்பான்மை எடுத்தால், 19 ஆவது திருத்தத்தை இல்லாமலாக்கி, திரும்பவும் ஜனாதிபதியின் அதிகாரங்களை கூட்டப் போறதா மேடையில மொட்டுக்கட்சிக்காரர் முழங்குகினம். ஆனால் பிரதமர் அண்ணாவுக்கு 19 ஐ இல்லாமல் ஆக்கிறது அவ்வளவு விருப்பம் இல்லையாம். ஏனென்டால் அப்பிடி செய்தா எல்லாத்துக்கும் தம்பியிட்ட போய்ப் கெஞ்சிக் கொண்டிருக்க வேணும், தனக்கு அதிகாரம் இல்லாமல் போகும் எண்டு அவர் நினைக்கிறாராம்.அதால எப்பாடுபட்டாவது 19 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்யிற வேலையை நிப்பாட்டத்தான் அண்ணன் கடுமையா வேலை செய்வார் எண்டு பட்சி சொல்லுது பாருங்கோ.

–பட்சி

## 13+

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள அனைத்து இனம் மற்றும் மதங்களுக்கிடையிலான ஒற்றுமையைக் கட்டியெழுப்பி, அந்த ஒற்றுமையை மேலும் பலப்படுத்த வேண்டும். நாட்டில் தீப்பிழம்புகளை உருவாக்குவது அல்ல ஆட்சியாளர்களின் கடமை. ஏதேனும் பிரச்சினை, முரண்பாடுகள் உருவாகவிருந்தால், அவற்றைத் தீர்த்துவைத்து, பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்கும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். இதுதான் ஆட்சியாளர்களுக்கான கடப்பாடாகும். ஒற்றையாட்சிக்குள் அரசமைபின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் நாம் அதிகாரங்களைப் பகிர்வோம். இதுவரையில் நடைமுறையில் இருந்ததை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம். எனவே, 13 பிளஸ்ஸூம் இல்லை, 13 மைனசும் இல்லை என்பதை கூறியாகவேண்டும்.

வெளிநாடுகளுக்கு இராஜதந்திரப் பணயம் மேற்கொள்ளும்போது பிளஸ் என்றும், விமான நிலையம் திரும்பியதும் மைனஸ் என்றும்கூறும் அரசியலை நாம் முன்னெடுக்கமாட்டோம். எம்மிடம் உறுதியான நிலைப்பாடு உள்ளது. எனவே, எவருக்கும் வளைந்துக்கொடுக்காத எமது பயணம் தொடரும். தெளிவான அரசியல் மற்றும் ஆட்சிக்கொள்கை எம்மிடம் உள்ளது, என்றார். (ஒ,5,44)

## எதிர்வரும்...

நடவடிக்கைகள் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கும் வகையில் பாடசாலைகள் இடம்பெறும். ஏனைய தரங்களுக்காக எதிர்வரும் ஒகஸ்ட் 10ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஒ,5)

## கொழும்புக்கு....

அவர்களின் பிள்ளைகள் படிப்பது கொழும்பில். தேர்தல் கேட்பது மட்டும் இங்கே. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

மிருசுவில் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை வீட்டுத் திட்டம் கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இராணுவம் நாட்டின் பாதுகாப்பு, இனங்களின் பாதுகாப்பு தவிர ஏனைய விடயங்களில் ஈடுபடுவதில்லை. இன்றைய பத்திரிகையில் இராணுவம் அரசியல் செய்வதாக கூறப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி இங்கே வரத் தேவையில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

அவர் இங்கு வந்தது அரசியல் செய்வதற்கு அல்ல. துன்பப்படும் மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்கு. அரசியல் செய்கிறார்கள் என்று மக்களிடம் அரசியல்வாதிகள் பொய் சொல்கிறார்கள்.

சில அரசியல்வாதிகள் பொய்களை சொல்லி வடக்கு மக்களை தவிக்க விடுகிறார்கள். இராணுவத்தால் இதுவரை 799 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் மக்களுக்குச் செய்யும் உதவி. இராணுவம் ஒருபோதும் அரசியல் செய்யாது. நல்லூர்க் கோவில் திருவிழா ஆரம்பமாகிறது. வேறு சில சிறிய கோயில்களிலும் திருவிழா இடம் பெற்று வருகிறது. அங்கு செல்லும் மக்கள் சுகாதார நடைமுறைகளை கடைப் பிடிக்கவும். கொரோனாவை கண்டு பயப்பட வேண்டாம், என்றார். (ஒ,5)

## வயதுக்கு வராத...

என்று வாதாடும் சைக்கிள் கட்சி. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அளவெட்டியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தம்பி பிரபாகரன் அன்று தொடங்கிய கூட்டமைப்பு போய் இன்று அது கூட்டணியாக மாறியுள்ளதை நீங்கள் ஏற்று எமக்கு ஒகஸ்ட் ஐந்தாம் திகதி தவறாது வாக்களிப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். வாக்களிப்பது எப்படி என்றும் கூறிவிடுகின்றேன். இம் முறை வாக்குப் பதிவுச் சீட்டு மிக நீளமானது. 33 கட்சிகளின் பெயர்கள் அதில் அடங்குகின்றன. அவற்றுள் 14 சுயேச்சைக் கட்சிகள். இந்த சுயேச்சைக் கட்சிகள் யாரோ சிலரின் அரசியல் சூழ்ச்சிகளின் பிரதிபலிப்பு. அவற்றையும் கூட்டமைப்பு உள்ளடங்கலாக அரசுக்கு முண்டு கொடுக்கும் கட்சிகளையும் நீக்கினால் இரண்டே இரண்டு கட்சிகள் தான் மிஞ்சும். அவற்றில் ஒன்று எங்களுடையது. மற்றையது வயது வராத, முதிர்ச்சி பெறாத, வாதம் ஒன்றே வாழ்க்கை என்று வாதாடும் சைக்கிள் கட்சி. அதற்குக் காலம் இருக்கின்றது. அதைத் தவிர்த்து அந்த வாக்குச்சீட்டில் மீன் சின்னத்தைத் தேர்ந்தெடுங்கள், என்றார். (ஒ,5)

## அரசியல் அந்தஸ்துக்காகவே....

எமக்கு ஒரு அரசியல் அந்தஸ்து தேவை. அதன் அடிப்படையிலேயே தேர்தலில் களமிறங்கியுள்ளோம். இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உடுவிலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் விஞ்ஞாபனம் என்பது தேர்தல் காலத்தில் வாக்காளர்களைக் கவர்ந்து நம்பக்கம் இழுப்பதற்கான ஒரு தந்திரோபாயம் நிறைந்த புழுகு மூட்டை என்று அறிந்து கொண்டேன். இந்த விடயத்தில் பொது மக்களும் நல்ல தெளிவுடன் இருந்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஆகப்போவது எதுவுமில்லை.

ஆனால் எமது ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் முகமாக அனைவரும் திரண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோக வெற்றி பெறச் செய்வோம் என்று கூறியே கூட்டமைப்புக்கு வாக்களித்தனர்.

ஆனால் கடந்த 5 வருட காலப் பகுதியில் கூட்டமைப்பின் செயற்பாடுகள் தமிழ் மக்களை படுகுழியில் தள்ளிவிடுவதற்கு ஒப்பானதாக அமைந்துள்ளன.

வடமாகாண சபையில் எம்மால் முன்மொழியப்பட்ட இனவழிப்புத் தீர்மானத்தை வடமாகாணசபை ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, ஏன் சிங்களச் சகோதரர்கள் கூட ஏற்றுக்கொண்டபோதும் அத் தீர்மானத்துக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தார்கள்.

தொடர்ந்தும் மாகாணசபையை இயங்கவிடாமல் தடுத்ததுடன் என்மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணையை முன்வைத்து என்னை முதலமைச்சர் பதவியில் இருந்து ஓரங்கட்டிவிட வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுத்தார்கள்.

ஆனால் அத் தருணத்தில் பொதுமக்களாகிய நீங்கள் கிளர்ந்தெழுந்து உங்களது அமோக ஆதரவையும் வரவேற்பையும் வெளிப்படுத்தும் முகமாக பல்லாயிரக்கணக்கில் எனது வீட்டு வாசலில் கூடி முழுமையான ஆதரவை நல்கியபோது, அவர்கள் பெட்டிப்பாம்பாக அடங்கிக் கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணை நடவடிக்கைகளைக் கைவிட்டு விட்டனர்.

அதற்கு பின்னரும் கூட நான் எதுவித சலனமுமின்றி இணைந்து பணியாற்றிய போதும் தலைமைகள் அமைதி காக்க இடைச் செருகல்கள் தீர்மானங்களை மேற்கொள்ளத் தொடங்கினர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலன்களைக் காக்கும் பணியில் இருந்து வெகு தூரம் விலகிச் சென்று சொத்து சேர்ப்பதிலும், சொகுசு பங்களா வாழ்க்கை வாழ்வதிலும் குடும்ப உறுப்பினர் முன்னேற்றத்திலும், வரிவிலக்கு சொகுசு கார்களைப் பெறுவதிலும் ஈடுபட்டு திசை மாறிய நிலையில் தொடர்ந்தும் இவர்களுடன் பயணிப்பதில் பலனில்லை என்ற தீர்மானத்துக்கு வந்தேன். ஆகவே தான் நாம் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளோம்.

எமது நடவடிக்கைகள் அனைத்தும் நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒரு செயற்பாடாகவே அமைந்திருப்பதால் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய அறிவார்ந்தோரின் கூட்டு முயற்சியாகவே எமது நடவடிக்கைள் தொடரும். ஆகையால் தனி மனித செயற்பாடுகளோ அல்லது தீர்மானங்களோ வலுவற்றுவிடுவன, என்றார். (ஒ,5)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியை....

பால சிறிசேன தெரிவித்தார்.
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மொனராகலையில் கலந்து கொண்ட கூட்டத்தில், மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவு வேட்பாளருக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டமை தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறிலங்கா பொதுஜன பெரமுனவிலுள்ள அடிமட்ட உறுப்பினர்கள் முதல் உயர்மட்ட உறுப்பினர்கள் வரை இம்முறை பொதுத்தேர்தலில் என்னைத் தோற்கடிக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிச் செயற்பட்டுக்கொண்டு வருகின்றார்கள். இது வெளிப்படையாகத் தெரிகின்றது. இதனைப் பொதுஜன பெரமுனவின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடமும், பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட கோத்தாபய ராஜபக்சவிடமும் நான் நேரடியாகவும் தெரிவித்திருக்கின்றேன். எனினும், எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை போல் தெரிகின்றது.
எது எப்படியிருந்தாலும் பொலனறுவை மக்களின் அமோக ஆதரவுடன் பொதுத்தேர்தலில் நான் சரித்திர வெற்றியைப் பெறுவேன்.
தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் திட்டமிட்ட வகையில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவினால் தாக்கப்பட்டு வருகின்றார்கள். இரு கட்சியினரும் ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிடுகின்ற போதிலும் எல்லா அவலத்தையும் நாம் சந்திக்கின்றோம். இதற்கெல்லாம் விரைவில் ஒரு முடிவு கிட்டும் என நாம் நம்புகின்றோம்- என்றார். (ஒ,5,22)

# சுகாதார வர்த்தமானி: சி.எம்.ஈ.வி. விசனம்

கொழும்பு, ஜூலை 20
பொதுத்தேர்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகளின் முதல் பிரதியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டும் சில நடைமுறைகள் நீக்கப்பட்டும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.
நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் மேலும் மோசமடைந்து வருவதற்கான அறிகுறிகள் தென்படும் நிலையில், தேர்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள இத்தகைய மாற்றங்கள் குறித்து விசனமளிப்பதாகவும் தெரிவித்திருக்கிறது.
தேர்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகளை முதல் பிரதியில் உள்ளவாறே வர்த்தமானிப்படுத்துமாறு சுகாதார அமைச்சரை வலியுறுத்தியிருப்பதுடன், ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட நடைமுறைகளில் ஏன் இத்தகைய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றும் இது வைரஸ் தொற்றை மேலும் தீவிரப்படுத்தும் பட்சத்தில் அரசால் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் வாக்களிக்கவிருக்கும் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் குறித்த நிலையம் கேட்டுக்கொண்டிருக்கிறது. (ஒ,5)

## வீடொன்றின் மீது நேற்று தாக்குதல்

கொடிகாமம், ஜூலை 20
சாவகச்சேரி மீசாலை கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.
இந்தத் தாக்குதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். வீட்டின் யன்னல்கள், மின் விளக்குகள் ஆகியன சேதப்படுத்தப்பட்டுள்ளன. (ஒ,5,159)

## பெண்கள் சிறையில் போதைப்பொருள்கள் மீட்பு

கொழும்பு,ஜூலை 20
வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோத போதைப் பொருள் உள்ளிட்ட மேலும் சில பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.
அதற்கமைய 400 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள், 19 அலைபேசிகள், 9 சிம் அட்டைகள், கையடக்கத் தொலைபேசிக்குரிய 165 மின்கலங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.
இந்தச் சிறைச்சாலையில் 70 பெண்கள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க)




# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடாது!

## ரணில் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 20
தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு மூன்று உறுப்பினர்கள் போதும். அதனைவிடவும் அதிகரித்தால் அரசியல் தலையீடுகள் ஏற்படக்கூடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
தேர்தல் ஆணைக்குழுவில் மூவர் மாத்திரமே உறுப்பினர்களாக இருக்கின்றனர். கூட்ட நடப்பெண்ணும் மூன்றாக இருக்கின்றது. இதனால் நடைமுறை சிக்கல்கள் உள்ளன. எனவே, இது தொடர்பில் உங்கள் கருத்து என்னவென எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மூவர் இருக்கவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. இது தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடப்பட்டது. ஐவர் இருந்தால்கூட ஐவரும் இணைந்து முடிவெடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நால்வர் முடிவெடுக்கும் நிலைமையை அனுமதிக்கமுடியாது.
உலகில் பிரபலமான நாடுகளில் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவர் மாத்திரமே. அந்த எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அரசியல் தலையீடுகளும் அதிகரிக்கும். மூவர் இணைந்து எடுக்கும் ஒருமித்த தீர்மானம்தான் முக்கியம். தொழில்நுட்ப வழியாகக்கூட கூட்டங்களை நடத்தலாம், என்றார். (ஒ,5,44)

## கொய் மீன் வருகை அதிகரிப்பு

குருநகர்,ஜூலை 20
'ஆடிக் கொய்யை தேடிப்பிடி' என்று குருநகரில் சொல்வது வழமை. அதற்கமைவாக குருநகர் சந்தையில் கொய் மீனின் வருகை அதிகரித்துள்ளது.
குருநகர் கடற்கரையில் இயங்கும் கடலுணவு விற்பனை வாடியிலும், குருநகர் சின்னக்கடைச் சந்தையிலும் நாளாந்தம் விற்பனை செய்யப்படுகிறது. குருநகர் கடற்கரை மீன் வாடியில் கொய் மீன் கிலோ 200 ரூபாவுக்கும், சின்னக்கடை கடலுணவுகள் விற்பனைப்பிரிவில் கிலோ 250 ரூபாவுக்கும் விற்பனைசெய்யப்படுகிறது. (க-51)

# பெரமுனவின் ஆட்சியில் நுவரெலியாவில் மாற்றம்

நுவரெலியா, ஜூலை 20
மலையகத்தில் மாற்றம் ஏற்படவேண்டும். அதற்காகவே நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான புதிய ஆட்சியின் கீழ் நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று பொதுமக்கள் முன்னணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் முத்தையா பிரபு தெரிவித்தார். விந்துலையில் அவர் மேலும் தெரிவித்தாவது,
'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவரின் அபிவிருத்தி செயல்திட்டங்களை எமது பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தவேண்டும். அபிவிருத்தி என்பது வார்த்தையில் மட்டுமல்ல செயலிலும் இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் அரசியலில் குதித்துள்ளேன். தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு பலரும் ஏமாற்றுவார்கள். ஆனால், செய்துகாட்டுவதற்காகவே நாம் அரசியலுக்கு வந்துள்ளோம்.
வருமானம் இன்மையே எமது மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாகும். அந்த வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கான வழிமுறைகள் இங்கு இல்லை. அதற்கான திட்டங்களையும் அரசியல்வாதிகள் கொண்டுவரவில்லை. நுவரெலியா மாவட்டத்தில் தொழிற்சாலைகள் இருந்தால் வெளி மாவட்டங்களுக்கு வேலைக்கு செல்லவேண்டியதில்லை. அவ்வாறான தொழிற்சாலைகளை கொண்டுவருவதற்கும் கடந்தகாலங்களில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறான திட்டங்களையே நாம் கொண்டுவர வுள்ளோம்.
தொழிற்சாலைகளை உருவாக்கினால் உதிரி தொழில்களும் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். வீட்டின் அபிவிருத்தி கூடினால் மட்டுமே நாட்டின் அபிவிருத்தி என்பது அர்த்தமுடையதாக இருக்கும் என்றார். (ம)

## தங்க நகைகள் திருடியவர் கைது

திருகோணமலை, ஜூலை 20

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 18 பவுண் தங்க நகைகள் திருடிய குற்றச்சாட்டில் ஒருவரை நேற்றிரவு மூதூர் பொலிஸார் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

இத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் அல்லை நகர், தோப்பூர் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனத் தெரியவருகின்றது.

தோப்பூர் பகுதியில் உள்ள வீடொன்றில் 18 பவுண் தங்க நகைகளை திருடிய சந்தேகத்தின் பேரிலேயே சந்தேகநபரைக் கைது செய்துள்ளோம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேகநபருக்கெதிராக பல திருட்டு வழக்குகள் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இருவர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

## மஞ்சள் தூளின் விலை மேலும் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 20



மஞ்சள் தூளின் விலை மேலும் அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு கிலோ கிராம் மஞ்சள் தூள் தற்போது 2 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளது.

சந்தைகளில் மஞ்சள் தூளுக்கு நிலவும் பற்றாக்குறை காரணமாக இவ்வாறு விலை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு மஞ்சள் தூளை இறக்குமதி செய்யும் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் அதனை இறக்குமதி செய்ய முடியாமல் உள்ளது.

அத்துடன் கடந்த சில தினங்களாக மஞ்சள் தூளை பதுக்கி வைத்துள்ள வர்த்தகர்களை தேடி நுகர்வோர் விவகார அதிகாரசபை சுற்றிவளைப்புக்களை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சில வர்த்தகர்கள் மஞ்சள்தூளில் கோதுமை மாவை கலப்படம் செய்திருந்தமையும் தெரியவந்துள்ளது. (ரி2)

## ரயில் முன் பாய்ந்து இளைஞர் உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஜூலை 20

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ரயில் முன் பாய்ந்து இளைஞரொருவர் உயிர் மாய்த்துள்ளார் என தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் தலவாக்கலை மற்றும் கொட்டகலை ரயில் நிலையங்களுக்கு இடையிலான சென்கிளையார் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தலவாக்கலை சென்கிளையார் தோட்டத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் அருள் பிரசாத் (வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ரி1)



மல்லாவி சுகாதார அதிகாரிகளுக்கு கொரோனா முழு ஆடை பாதுகாப்பு அங்கிகள் கிளிநொச்சி லயன்ஸ் கழகத்தினால் மல்லாவி லயன்ஸ் கழகத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன. (ரி1-222)

நாணய மாற்று உடன்படிக்கை:

## இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜூலை 20

நாணய மாற்று உடன்படிக்கையொன்று தொடர்பில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் சீனாவின் மக்கள் வங்கியும் இலங்கையின் மத்திய வங்கியும் ஈடுபட்டுள்ளன.

இந்த விடயத்தில் ஜூலை மாத இறுதிக்குள் நிலையான தீர்மானம் எடுக்கப்படும் என்று சீன தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சீனாவிடம் இருந்து பெற்ற கடன்களை மீள செலுத்தும் காலத்தை நீடிப்பது தொடர்பிலும் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனும் குறித்த இரண்டு உடன்படிக்கைகள் தொடர்பில் இலங்கை ஏற்கனவே பேச்சு நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

தேர்தல் சட்ட மீறல்கள்:

## 3 வேட்பாளர் உட்பட 210 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 20

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 3 வேட்பாளர்கள் உட்பட 210 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேர்தல் சட்டவிதிகளை மீறியதாக 3 வேட்பாளர்கள் உட்பட 210 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் 147 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளமையுடன் , 44 பெரிய குற்றச்செயல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை அரச வாகனங்கள் 2 உட்பட 60 வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் சட்டமா அதிபருக்கு அறிவித்து அவரது ஆலோசனைக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்றார். (ரி1)

## ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு பயணித்த வாகனங்கள் விபத்து

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக பயணித்த வாகனங்கள் இரண்டு மஹரகம நகர மத்தியில் ஒன்றோடு ஒன்று மோதி விபத்திற்குள்ளாகின.

இந்த விபத்து நேற்று இரவு இடம்பெற்றுள்ளதாக மகரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் இரண்டு வாகனங்களுக்கும் மாத்திரமே சேதம் ஏற்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு மீண்டும் கொழும்பு நோக்கி பயணிக்கும் போது இரவு 9.20 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு பின்னால் வந்த வாகன வரிசைகள், ஹய்லெவல் வீதியின் ஊடாக கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி திடீரென திருப்பும் போது, ஏற்படவிருந்த விபத்தை தடுப்பதற்காக ஜனாதிபதி பாதுகாப்பு வாகனத்தின் பிரேக் அழுத்தப்பட்டுள்ளது. இதனால் பின்னால் வந்த வாகனம் முன்னால் பயணித்த வாகனத்துடன் மோதியுள்ளது. இதனால் இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதற்கமைய முச்சக்கர வண்டியின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில், ஜீப் வாகனங்களில் இரண்டும் முச்சக்கர வண்டியும் பொலிஸாரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மஹரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

## நீரில் மூழ்கி காதலன் பலி

காலி, ஜூலை 20

காலி மாவட்டம் நெலுவலங்காகமவில் அமைந்துள்ள தூவிலி எல்லவில் தனது காதலியுடன் நீராடிக் கொண்டிருந்தவர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் வெள்ளவத்தை மெல்பன் பிரதேசத்தில் வசித்து வந்த 35 வயதுடையவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பிரதேச மக்களும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையைத் தொடர்ந்து குறித்த நபரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த நபரின் சடலம் நெலுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் பிரேத பரிசோதனைகள் காலி கராபிட்டிய மருத்துவமனையில் இன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

## பொலிஸ் அதிகாரிகளுக்கு தேர்தல் ஒழுங்குவிதிகள்

கொழும்பு, ஜூலை 20

நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளுக்கான ஒழுங்கு விதிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இந்த ஒழுங்குவிதிகள் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேர்தலின் போது அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் முறைகள் தொடர்பில் பொலிஸார் அறிந்து கொள்வதற்காகவே இந்த ஒழுங்கு விதிகள் வெளியிடப்பட்டுள்ளன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ரி1)

## திருமணம் செய்த அன்றே தூக்குப்போட்ட இளைஞன்

கம்பளை, ஜூலை 20

கம்பளை பகுதியில் திருமணம் செய்த அன்றே இளைஞன் ஒருவர் தற்கொலை செய்து கொண்டமையினால் பிரதேசத்தில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த 19 வயதுடைய இளைஞனை நள்ளிரவு 12 மணியளவில் அழைத்துச் சென்ற குடும்பத்தினர் அதிகாலை 3 மணிக்கு திருமணம் செய்து வைத்துள்ளனர். அதன் பின்னர் அந்த இளைஞன் காலையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இந்தச் சம்பவத்தால் கம்பளை, உலபன பிரதேசத்தில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது;

சம்பவத்தில் உயிரிழந்த இளைஞன் 18 வயதுடைய பெண் ஒருவருடன் காதல் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் இதனால் அந்தப் பெண் கர்ப்பமடைந்திருந்தார் என்றும் கூறப்பட்டது. இந்த நிலையில் இளைஞனைக் கூட்டிச் சென்று திருமணம் செய்து வைத்தனர் என்றும் திருமணம் முடிந்த அன்றைய தினமே காலை 9 மணியளவில் அந்த இளைஞன் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

## விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலி

கொழும்பு, ஜூலை 20

கொழும்பு நுகேகொடைப் பாலத்தில் இராணுவ கெப் வண்டி ஒன்று, தனியார் பேருந்து ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. சம்பவத்தில் உயிரிழந்த இராணுவச் சிப்பாய் அந்த கெப் ரக வாகனத்தின் சாரதி என தெரிவிக்கப்படுவதோடு, காயமடைந்த இருவரும் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ரி2)

# தேர்தல் விடயங்களைக் கண்காணிக்க இந்திய றோ புலனாய்வுச் சேவை

கொழும்பு, ஜூலை 20

இம்முறை பொதுத் தேர்தல் தொடர்பான விடயங்களைக் கண்காணிக்க இந்தியப் புலனாய்வுச் சேவையான றோ புலனாய்வு சேவையின் அதிகாரிகள் சிலர் இரகசியமாக இலங்கைக்குள் வந்துள்ளனர் என சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் அதன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் ஆகியோர் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் நடத்திய சில கூட்டங்களில் இந்தியா இந்தத் தேர்தல் தொடர்பான பின்னணிகளைக் கண்காணித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சீனாவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பது மற்றும் சீனாவிடம் இருந்து நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வது காரணமாக இந்தியாவின் றோ புலனாய்வு சேவை இலங்கையின் தேர்தல்களில் தலையீடுகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்தியப் புலனாய்வு சேவை தலையீடுகளை மேற்கொண்டிருந்தது. இந்திய றோ புலனாய்வுச் சேவையின் 10 முகவர்கள், றோ அணியினருக்கு தகவல்களை வழங்கி வருகின்றனர் என அரசாங்கத்தின் உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்றும் அந்த சிங்கள இணையத்தளம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ரி2-22)

## சுகாதார மற்றும் பாதுகாப்பு விசா திட்டத்தை பிரிட்டன் முன்னெடுப்பு

கொழும்பு, ஜூலை 20

இலங்கையின் சுகாதார ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு விரைவாக விசா அனுமதியை வழங்குவதற்காக சுகாதார மற்றும் பாதுகாப்பு விசா முறை என்ற வேலைத்திட்டத்தை பிரிட்டன் முன்னெடுத்துள்ளது.

தகுதியான இலங்கையர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு துரிதமாக விசாவை வழங்குதல், விசாக் கட்டணங்களைக் குறைத்தல் மற்றும் குடியேற்ற சுகாதார மேலதிகக் கட்டணங்களை இடைநிறுத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில மாதங்களில் உரிய முறையில் நடைமுறைக்கு வரவுள்ள இந்தச் சுகாதார மற்றும் பராமரிப்பு விசா அனுமதியின் ஊடாக சுகாதார தொழில் துறையினரை பிரித்தானியாவின் தேசிய சுகாதாரத் துறையில் துரிதமாக இணைப்பதற்காக இந்த வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி2)

## வாக்குச்சீட்டைப் படம்பிடித்து சிக்கலில் மாட்டிய ஆசிரியர்

மூதூர், ஜூலை 20

புள்ளடியிடப்பட்ட தபால் மூல வாக்குச் சீட்டை தனது அலைபேசியில் புகைப்படம் எடுத்த ஆசிரியருக்கு எதிராக நாளை மூதூர் நீதிவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

தபால்மூல வாக்களிப்புக்காக மூதூர் கல்வி வலய அலுவலகத்துக்கு கடந்த 15ஆம் திகதி குறித்த வலயப் பாடசாலை ஆசிரியர் ஒருவர் வந்துள்ளார். வாக்களிப்பின் பின்னர் வாக்குச்சீட்டை அவர் புகைப்படம் எடுத்துள்ளார்.

அதன்போது தேர்தல் அதிகாரிகளிடம் சிக்கிய நிலையில் அவரின் அலைபேசியை அதிகாரிகள் பொறுப்பேற்றுள்ளனர். பின்னர் விசாரணைகளுக்காக அந்த அலைபேசி மூதூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தனது மகனுக்கு வாக்களிப்பு என்றால் என்ன என்பது குறித்து விளக்கமளிப்பதற்காகவே தான் வாக்குச்சீட்டை புகைப்படம் எடுத்தார் என்று அந்த ஆசிரியர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். எனினும் வாக்குசீட்டை வைத்திருத்தல் அதனைப் புகைப்படம் எடுத்தல் என்பன 1981 இலக்கம் 1 என்ற நாடாளுமன்ற தேர்தல் விசாரணை சட்டத்தின் 66 இன் உறுப்புரைக்கமைய தண்டனைக்குரிய குற்றம் ஆகும் என்று கிழக்கு மாகாண உதவி தேர்தல் ஆணையாளர் எஸ். சுதாகரன் தெரிவித்துள்ளார். (ரி1)

# எண்ணெய்க் குதங்களைப் பார்வையிட திருமலையில் அமைச்சர் தலைமையில் குழு

திருகோணமலை, ஜூலை 20

திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய் குதங்களைப் பார்வையிடுவதற்காக எரிசக்தித்துறை அமைச்சின் குழுவொன்று இங்கு வந்துள்ளது.

இந்தியா வசம் உள்ள 20 எண்ணெய் குதங்களை மீண்டும் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபன பயன்பாட்டுக்காக பெற்றுக்கொள்ளும் முனைப்புக்களில் தற்போது இலங்கை ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாகவே திருகோணமலைக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையிலான குழுவினர் சென்றிருந்தனர்.

திருகோணமலையில் உள்ள எண்ணெய் குதங்களை இயக்குவது தொடர்பில் ஏற்கனவே இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறையில் உள்ளது. எனினும் இதில் 20 குதங்களில் குறைந்தது 15 குதங்களையாவது இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொள்ள முயற்சிக்கப்படுகின்றது என்று அமைச்சர் அமரவீர குறிப்பிட்டுள்ளார். இந்தியா இந்தக் குதங்களை கூட்டாக இயங்குவதற்கே விரும்புகிறது. எனினும் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் இந்த உடன்படிக்கையை பல தடவைகள் மீறியுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ரி1)

# நாளாந்தம் ரூபா ஒரு கோடி இ.போ.ச.வுக்கு நஷ்டம்

கொரோனாத் தொற்றுக் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நாளாந்தம் சுமார் ஒரு கோடி ரூபா நஷ்டம் ஏற்படுவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பொதுப் போக்குவரத்துச் சேவை ஊடாக பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் எண்ணிக்கை குறை வடைந்ததன் காரணத்தினால் போக்குவரத்துத்துறை வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 5,300 பஸ்கள் நாளாந்தம் குறைந்த வருமானத்திலேயே சேவையில் ஈடுபடுகின்றன எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (ரி3)

## இராணுவ அதிகாரியின் வீடு உடைத்து திருட்டு

கம்பளை, ஜூலை 20

இராணுவ அதிகாரி ஒருவருக்குச் சொந்தமான கம்பளை, தலவத்துர பிரதேசத்தி லுள்ள வீடு ஒன்று உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அதிகாரி கந்தகாடு முகாமிலிருந்த போது கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து அவரும் அவரது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில், தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்த இராணுவ அதிகாரி தொலைபேசியில் தனது மனைவியின் சகோதரனைத் தொடர்புகொண்டு, வீட்டில் வளர்க்கப்படும் அலங்கார மீன்களுக்கு உணவுபோடுமாறு கூறியுள்ளார். அதற்கமைய அவர் நேற்றுக் காலை வீட்டுக்குச் சென்றபோது வீட்டின் பின்புறக் கதவு உடைக்கப்பட்டுள்ள அதேவேளை, ஜன்னல் உடைக்கப்பட்டு அலுமாரியும் திறக்கப்பட்டிருந்தமையும் அவதானித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, வீட்டிலிருந்த தொலைக்காட்சி, டிவீடி உள்ளிட்ட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளமையுடன் வீட்டின் அலுமாரியிலுள்ள பொருட்களும் கலைக்கப்பட்டிருந்தன என இராணுவ அதிகாரியின் மனைவியின் சகோதரர் ஒருவர் தவுலகல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)



## சட்டவிரோத மரக்கடத்தல் முறியடிப்பு!!

வவுனியா, ஜூலை 20

மன்னார் மடு பொலிஸ்பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் பகுதியில், சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்பட்ட மரக்கடத்தல் நடவடிக்கையொன்று வவுனியா புளியங்குளம் விஷேட அதிரடி படையினரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

முள்ளிக்குளம் காட்டுப்பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் மரங்கள் கடத்தப்படுகின்றன என்று இன்று காலை கிடைத்த தகவலுக்கு அமைய அப்பகுதிக்குச் சென்ற வவுனியா புளியங்குளம் விஷேட அதிரடிபடையினர் 13 முதிரைமரக்குற்றிகளை மீட்டுள்ளனர். அதனுடன் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

வாகனத்தின் சாரதி தப்பிச்சென்றுள்ள நிலையில் அதன் உரிமையாளர் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மீட்கப்பட்ட மரக்குற்றிகள் மற்றும் வாகனம் என்பன நீதிமன்ற நடவடிக்கைளுக்காக வவுனியா மாவட்ட வனவள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ரி1-110,18)



## வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்த 3 பிக்குகள் உட்பட நால்வருக்கு கம்பளை நீதிமன்றம் அபராதம்

பாதையை புனர்நிர்மாணம் செய்யக் கோரி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட மூன்று பிக்குமார் உட்பட நால்வருக்கு கம்பளை மாவட்ட நீதிமன்றத்தினால் தலா 13,000 ரூபா வீதம் 52,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது:

கம்பளையிலிருந்து தெபிலிகள வல்லாகொட வரையிலான வீதியை புனர் நிர்மாணம் செய்யக் கோரி கடந்த வருடம் ஜூலை மாதம் 4 ஆம் திகதி தெபிலிகள விஹாரையின் விஹாராதிபதி தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இணைந்து கம்பளை- நாவலப்பிட்டி பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. தடை உத்தரவையும் மீறி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டகாரர்களுக்கும் பொலிஸாருக்கும் முறுகல் நிலை ஏற்பட்டது.

அதையடுத்து பிக்கு ஒருவர் கட்டிலில் படுத்தவாறு சாகும் வரை உண்ணா விரதம் இருந்தார். அவரைப் பொலிஸார் தாக்கினர் என்று கூறி ஆர்ப்பாட்டகாரர்கள் அந்தப் பிக்குவைப் பல கிலோமீற்றர் தூரம் வரை கட்டிலுடன் தூக்கிக்கொண்டு வந்து கம்பளை வைத்தியசாலையில் அனுமதித்தனர். இச்சந்தர்ப்பத்தில் பொதுப்போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டது.

இதனையடுத்து நீதிமன்றத் தடை உத்தரவை மீறியமை, சட்ட விரோதமாக பொதுமக்களை ஒன்றுகூட்டியமை மற்றும் பொதுப் போக்குவரத்துக்கும் பொலிஸாரின் கடமைகளுக்கும் இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பாக கம்பளை பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்தப் வழக்கு விசாரணைகள் கடந்த ஒரு வருட காலமாக இடம்பெற்று வந்தது. இந்நிலையில் கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஸ்ரீ நித் விஜேசேகரவினால் மேற்கண்ட தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## போதைப்பொருள், பாலியல் துஷ்பிரயோக குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

இரத்தினபுரி, ஜூலை 20

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களுக்கும் கடுமையான தண்டனைகளை வழங்குமாறு இரத்தினபுரி மக்கள், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரத்தினபுரியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசார நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி, அதனைத் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டார். இச் சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

மேலும், அவிசாவளையிலிருந்து ஒப்பநாயக்க வரையிலான ரயில் பாதைக்குச் சொந்தமான காணிகளில் வதியும் சுமார் 35,000 பேருக்கு சட்ட ரீதியான உறுதிகள் இல்லாமை மற்றும் சுரங்க கைத்தொழிலாளர்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதுடன் பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி முன்னெடுத்து வரும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் எனவும் இரத்தினபுரி மக்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, முன்மொழியப்பட்டுள்ள இரத்தினபுரி நகர அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் நகருக்கு ஒரு புதுத்தோற்றம் கிடைக்குமென தெரிவித்துள்ள ஜனாதிபதி, சுரங்கத் துறையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியவாறு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதை ஒரு நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளார் என அவரது ஊடகப் பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)


## தனியார் காணியில் தீப்பரவல்

மட்டக்களப்பு, ஜூலை 20

மட்டக்களப்பு பகுதியிலுள்ள தனியார் பண்ணைக் காணி ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

இச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக அப்பகுதியிலுள்ள மக்கள், தீயணைப்புப் பிரிவுக்கு அறி வித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த மாநகரசபை தீயணைப்பு படையினர் மற்றும் இராணுவத்தினர், தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். மேலும் தீ ஏற்பட்டமைக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை எனத் தெரியவருகின்றது. (ரி2)





வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இன்று ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு மக்கள் இறந்த பிதிர்களின் ஆன்ம ஈடேற்றம் வேண்டி ஆலயத்தின் பாலாவி தீர்த்தத்தில் நீராடி பிதிர்க் கடன்களை நிறைவேற்றியமையுடன், ஆலயத்தில் நெய் விளக்குகளை ஏற்றியும் வழிபட்டனர். இங்கு பூஜை வழிபாடுகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ரி3-56)

# தெற்கில் கடும் மழை வெள்ளத்தில் வீதிகள்



## 5 மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 20

நாட்டில் தற்போது காணப்படும் கடும் மழையுடனான காலநிலையால் கொழும்பில் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நாட்டின் 5 மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு அருகே தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் வளிமண்டல மேலடுக்குச் சுழற்றி ஏற்பட்டுள்ளதால் நாட்டின் பல பகுதிகளில் கடும் மழையுடனான காலநிலை நிலவும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று அதிகாலை முதல் கடும் மழை பெய்துவருகின்றது. அதனால் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கி நேற்றுப் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கிருலப்பனை, பேஸ்லைன் சந்தி வெள்ளத்தில் மூழ்கியது. அதனால் ஹைலெவல் வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கொழும்பில் பல இடங்களிலும் மழையால் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின. அதனால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது. அதேவேளை, கொழும்பு, கம்பகா, காலி, இரத்தினபுரி, கேகாலை ஆகிய பகுதிகளிலும் நேற்றுக் காலை கன மழை பெய்துள்ளது.



நேற்றுக் காலை 8.30 மணி முதல் காலை 11.30 மணி வரை மூன்று மணி நேரத்தில் கம்பாகா மாவட்டத்தின் மினுவங்கொட பகுதியில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. 109 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி அங்கு பதிவாகியுள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. காலியில் உள்ள ஹேகோடா பகுதியில் 82 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், யக்கலமுல்லவில் 74.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு, சபராகமுவா, மத்திய, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாட்டில் சில பகுதிகளில் 150 மில்லி மீற்றர்க்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டின் 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. அதையடுத்து 5 மாவட்டங்களில் மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் அல்பிட்டிய, நாகொடை மற்றும் நியாகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு முதலாம் கட்ட எச்சரிக்கையான மஞ்சள் நிற எச்சரிக்கையும், 4 மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்ட எச்சரிக்கையான செம்மஞ்சள் நிற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் சீதாவாக்கை, களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்ஹள, வலல்லாவிட்ட மற்றும் பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கும், கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்டை மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட மற்றும் எஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கும் செம்மஞ்சள் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இமதுவா, பின்னடுவா வெளியேறும் இடங்களுக்கு இடையேயான பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. சீரற்ற காலநிலையால் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இமாடுவ மற்றும் பின்னடுவா பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக இந்தப் பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ரி2)



# 6,052 பேர்

## தனிமைப்படுத்தல் நிலையங்களில்

முத்தரப்பு படைகளால் பராமரிக்கப்பட்டு வரும் 53 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 6,052 நபர்கள் இன்னும் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

கொவிட்19 வெடிப்பைத் தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு நிலையங்களிலிருந்து, இதுவரை 24, 203 நபர்கள் கட்டாய தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறையை முடித்து வெளியேறியுள்ளனர். தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறையை முடித்த மேலும் 6 நபர்கள் இன்று கல்பிட்டி தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளனர். (ரி1)

# மிளகு ஏற்றுமதி அபிவிருத்திக்கு புதிய திட்டம்

கொழும்பு, ஜூலை 21

முக்கிய ஏற்றுமதிப் பயிராக மிளகுப் பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு உடனடியாக திட்டமொன்றைத் தயாரிப்பதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இரத்தினபுரியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு மக்களுடன் கலந்துரையாடியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், சுதேச மிளகுக்கு புதிய சந்தை வாய்ப்புகளைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், முடிவுப் பொருள்களாக மிளகை ஏற்றுமதி செய்வதற்கும் விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவர்.

பொதியிடப்பட்ட மிளகு ஏற்றுமதியின் மூலமும் மிளகுடன் தொடர்புடைய புதிய உற்பத்திகளை உலக சந்தைக்கு அறிமுகப்படுத்தியும் அதிக வருமானத்தை ஈட்ட முடியுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்பில், குடிதண்ணீர் மற்றும் விவசாயத் துக்கான நீர் பற்றாக்குறை மற்றும் காணிப் பிரச்சினை கள் உள்ளிட்ட மேலும் பல மக்கள் பிரச்சினைகள் குறித்து கவனம்செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ரி3)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 20.07.2020 இல் வெளியிடப்பெற்றது.